## இயேசு குழந்தைகளை பெரியவர்களுக்கு முன்மாதிரியாகக் காட்டவில்லையா?

– திருத்தந்தை 2 ஆம் ஜோன் போல்







நாமும் கூட சில சமயங்களில் பிறரின் நேர்மை மற்றும் நல்லெண்ணம் கொண்ட முயற்சிகளை கேலி செய்யும்போது ஒருவகையான பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளோம். நாம் மனிதரின் தவறான பக்கத்தை மட்டுமே பார்க்கிறோம். மேலும் அந்த நபருக்கு நாம் வாய்ப்புகளை வழங்குவதே இல்லை. அவர்களை நாம் குற்றம் சுமத்திக்கொண்டே இருக்கிறோம். சிலசமயங்களில் அருள்பணியாளர்கள், ஆயர்கள் இன்னும் திருத்தந்தையின் மீதுகூட அவர்களின் முயற்சிகள், எவ்வளவு நல்ல நோக்கத்தைக் கொண்டிருந்தாலும் கூட அவர்களின் வார்த்தைகள் செயல்களில் உடன்பட முடியாமல் கசப்புணர்ச்சியுடன் நாம் புகார் அளித்திருக்கக்கூடும்.

பார்வை இல்லாதவராக இருப்பது சோகமான ஒன்றுதான். ஆனால் கண்ணிருந்தும் பார்க்கமுடியாதுபோனால் அது இன்னும் மோசமான ஒன்று. இயேசு செய்த அனைத்து உண்மைகளையும் எடுத்துச் சொல்லாமல் போனால் இது மன்னிக்கமுடியாத பாவம் என்று இயேசு கூறுகிறார். திரளான மக்கள் இயேசுவிடம் வருவதையும் அவர் செய்த நல்லவை அனைத்தையும் மறைநூல் அறிஞர்கள் கண்டார்கள். ஆனால் நம்பிக்கைக் கொள்ளவில்லை. நம் வாழ்விலும், நம் குடும்பங்களிலும், திருஅவையிலும், உலகிலும் மக்கள் செய்யும் மகத்தான பங்களிப்பைப் பற்றி நாமும் அறிவோம். ஆனால் அவர்களின் நேர்மறையான தாக்கத்தை ஏற்றுக்கொள்ளவோ, மகிழ்ச்சியடையவோ நாம் விரும்புவதில்லை. நாம் நினைக்கும் விதத்தில் காரியங்கள் நடக்காதபோது, குறைகூறுவதும் விரலைச் சுட்டிக் காட்டி பிறர்மீது பழி சுமத்துவதும் மிகவும் எளிது. பெரும்பாலும் நம்முடைய “நிறவேறுபாடுகள்” கொண்ட பார்வையை பிறர்மீது காட்டுகிறோம். இதன் விளைவாக, நம்மைச் சுற்றி ஒரு அவநம்பிக்கை, குழப்பத்தை ஏற்படுத்தும் ஒரு நெருப்பை நாம் உருவாக்குகிறோம். இந்த வழியில் நமது பார்வைக்குறைப்பாடு பிறரையும் பாதிக்கும் ஒரு தொற்றுநோயாக மாற வாய்ப்புள்ளது.

இன்று இயேசு நாம் பார்வைக்குறைபாட்டோடு மிகையாக நடந்துகொள்ளாமல் இருக்க, நம்மைச் சுற்றி நிகழும் சூழ்நிலையை எவ்வாறு பகுத்தறிவது என்பதற்கான அளவுகோலை நமக்கு கற்றுத் தருகிறார். “என் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுபவரே, என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்” என்று கூறுகிறார். நமது ஒவ்வொரு வார்த்தையும், செயலும் தந்தையின் விருப்பத்திற்க்கேற்ப செய்யப்படுகிறதா என்பதைப் பகுத்தறிய இது தான் அளவுகோல். இதை நாம் எவ்வளவு அதிகமாகப் பயிற்சி செய்கிறோமோ அவ்வளவு அதிகமாக பார்வைக்குறைப்பாட்டிலிருந்து வெளியே வந்து ஒளியில் நடப்போம்.

### இன்றைய இறைவார்த்தை:

தொ.நூ: 3: 9-15

திபா: 130: 1-8

2 கொரி: 4: 13-5:1

மாற்: 3: 20-35


INTERNAL CIRCULATION ONLY
BUL 23/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org



9 ஜூன் 2024
பொதுக்காலம் ஆண்டின் 10 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec


## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்

திருஅவையாக நம் குழந்தைகளை வளரவிடுங்கள்

# ஆன்மீகப் பார்வைக்குறைபாடு

“சாத்தான் எவ்வாறு சாத்தனை ஓட்ட முடியும்?” இயேசு சாத்தானால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்று கூறிய மறைநூல் அறிஞர்களை நோக்கி இயேசு இவ்வாறு கேட்கிறார். இயேசு செய்த அருளடையாளங்களைக் கண்டபின்னும் மறைநூல் அறிஞர்கள் இயேசு யார் என்பதைக் கண்டுகொள்ளாமல் இருந்தனர். அவர்களுக்கு ஆன்மீகப் பார்வைக்குறைபாடு இருந்தது. அது மிகவும் வெளிப்படையாக தெரிந்தது.